# கிழக்கு மாகாணத்தில் யுத்தத்திற்கு பின்னரான சமூகப் புரிந்துணர்வில் இந்துமத நிறுவனங்களின் வகிபாகம்

**(சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் சமூகஞ்சார் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)**

**சுபராஜ், என்.**

## 1.1 ஆய்வுச் சுருக்கம்:

ஒரு சமூகம் பல காரணங்களால் எதிர்நோக்கும் யுத்தத்தின் தாக்கம் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் அச்சமூகத்தில் நிலைத்து நிற்கும். அத்தகைய தாக்கங்களை மக்களிடமிருந்து நீக்குவதில் பல தரப்பினரும் முன்னின்று செயற்படுவர். ஆனால் அச்சமூகஞ்சார் சமய நிறுவனங்களே சிதைந்து போன தமது சமூகத்தின் கட்டமைப்பின் மீளாக்கத்திற்கு தமது உண்மையான உழைப்பினைக் கொடுக்கின்றன. பல்லினத்தையுஞ் சார்ந்த மக்களின் இருப்பிடமாவுள்ள இலங்கையின் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது. இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாகாணங்களில் கிழக்கு மாகாணமும் ஒன்று. இம்மாகாணத்தில் யுத்தத்திற்கு பின்னரான சமூகக் கட்டமைப்பில் இந்துமத நிறுவனங்களின் வகிபங்கு பற்றி இவ்வாய்வு அலசுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் யுத்தத்திற்கு முன்னரும், அதற்குப் பின்னரும் பல இந்துசமய நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இருப்பினும் ஆய்வின் விரிவஞ்சி, ஆய்வின் மைய விடயத்தை நிறுவும் பொருட்டு, ''சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம்'' (Sivan Human Development Association) எனும் நிறுவனம் ஆய்வின் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் சமூகஞ்சார் செயற்பாடுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு யுத்தத்திற்கு பின்னரான சமூகக்கட்டமைப்பில் இத்தகைய நிறுவனங்களின் வகிபங்கையும், தேவையையும் இவ்வாய்வு மதிப்பீடு செய்கின்றது.

**Key Words:** சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம், சமூகத்தின் கட்டமைப்பு, சமய நிறுவனம்

## 1.2 ஆய்வின் நோக்கங்கள்:

01. சமூக நோக்கங் கொண்டு செயற்படும் சமய நிறுவனங்கள் சமூகத்தில் செலுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்
02. யுத்தத்திற்குப் பின்னரான சமூகத்தின் பன்முகப்பட்ட தேவைகளில் இத்தகைய சமய நிறுவனங்கள் மூலம் நிறைவேறக்கூடிய குறைந்தபட்ச தேவைகளை இனங்காணல்
03. யுத்தத்திற்குப் பின் சமூகத்தின் கட்டமைப்பில் முக்கிய பங்கு வகிக்கும் இத்தகைய சமய நிறுவனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், தேவைகளையும் கண்டறிதல்

## 1.3 ஆய்வு முறையியல்:

இவ்வாய்வுக்கு முதல் நிலைத்தரவுகள், வழிநிலைத்தரவுகள் ஆகியன ஆய்வு மூலங்களாக கொள்ளப்படுகின்றன.

### 1. முதல் நிலைத்தரவுகள்:

(அ) வினாக்கொத்து
(ஆ) பேட்டி முறை
(இ) களவாய்வு

வினாக்கொத்து, பேட்டி முதலிய சமூக ஆய்வு முறைகள் மூலம் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் உறுப்பினர்கள் மற்றும் அதன் பயனாளிகள் முதலியோரிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

### 2. இரண்டாம் நிலைத் தரவுகள்:

(அ) நூல்கள்
(ஆ) சஞ்சிகைகள்
(இ) பத்திரிகைகள்

சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் தொடர்பான மேற்படி மூலங்களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்கள் பண்புசார் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன் விமர்சன ரீதியிலமைந்த ஒப்பீட்டாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

**1.4 ஆய்வின் மையம்:** (ஆய்வு பற்றிய கலந்துரையாடலும் கண்டுபிடிப்புக்களும்)

சமூகப் புரிந்துணர்வு என்பது "இடைவினை புரிகின்ற ஒரு மக்கட் குழு அல்லது குழுக்கள் ஒரு சமூகப்பிரிவாக உருவாகியிருக்கும் சமூகத்தின் கட்டமைப்பில் ஒன்றையொன்று விலகாமல் நெருங்கியிருத்தல் ஆகும். இது சிறு குழுவிலிருந்து பெரிய சிக்கலான சமூகம் வரையிலும் உள்ள எந்த விதமான சமூகக்குழுவினையும்குறிக்கிறது. இது சமூகத்தூண்டல்கள் ஒன்றாக இணைந்து ஒரு முழுச்சமூகமாக உள்ளதையும் சமூக இடைவினையின் அனைத்து வடிவங்களுக்கும் இடையிலான ஒற்றுமைகளையும் காண்பிக்கின்றது.

இந்தவகையில் யுத்தத்திற்கு பின்னரான சமூகத்தின் புரிந்துணர்வுக்கு அச்சமூகஞ்சார் சமய நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி தனது பணிகளை செய்துவரும் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் அம்பாறை மாவட்டத்திலும் தனது கிளையொன்றை விரைவில் நிறுவ இருக்கின்றது. சமூகப் பணிகளைச் செய்வதற்கான முறையான யாப்பொன்றை வரைந்துள்ள இந்நிறுவனம் அந்த யாப்பிற்கமைய தனது சேவைகளை முறைப்படுத்தியும் வருகின்றது. போதுமான ஆளணி வளம் இல்லாத போதும் தமது நிறுவனத்தால் இயலுமான பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வருகின்றது இந்நிறுவனம்.

தம் பெயரை வெளியில் பெரியளவில் பிரசுரிக்க விரும்பாத இந்நிறுவனம் யுத்தத்திற்கு பின்னரே பாரிய வளர்ச்சியைக் கண்டது. 1990ஆம் ஆண்டு முற்பகுதிகளில் காங்கேசன்துறையில் வாழ்ந்த தம்பு இரத்தினம் பிள்ளை அவர்கள் தான் இந்தியாவில் இளம் பராயத்தில் கற்றுத் தேர்ந்த பல கலைகளை காங்கேசன்துறையிலும் பொதுமக்களுக்கு புகட்டி வந்தார். இவர் இலங்கையில் ஏற்பட்ட மொழிப்பிரச்சினைக்காக பல நாட்கள் உண்ணாவிரதமிருந்தவர். இவர் இராமமூர்த்தி உடற்பயிற்சி நிறுவனம் என்று ஓர் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் மல்யுத்தம், தற்காப்பு கலை, உடல்வித்தைகள், யோகாசனப் பயிற்சி போன்றவற்றை குருவாக இருந்து புகட்டி வந்தார். இந்த இராமமூர்த்தி உடற்பயிற்சி நிறுவனமே தம்பு இரத்தினம் பிள்ளை அவர்களின் மகனான ஆர்.கலியுகவரதன் என்பவரால் 2002ஆம் ஆண்டில் "சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம்" எனும் பெயரில் ஒரு சமூக சேவை நிறுவனமாக உருவாக்கப்பட்டது. யுத்தத்திற்கு பின்னர் இதன் பணிகள் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டன.

இலங்கை முழுவதும் உள்ளடக்கியதாகவே இந்நிறுவனத்தின் பணிகள் அமைகின்ற போதிலும் யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் கிழக்கு மாகாணத்திலேயே அதன் பணிகள் அதிகம் இடம் பெறுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இந்நிறுவனம் சமூகத்திற்கென பல நலத்திட்டங்களை செய்து வருகின்றது. அவற்றுள்,

1. ஊனமுற்றவர்களுக்குப் பயன்படுத்துவதற்கான துணைக் கருவி வழங்குதல்.
2. பல்கலைக்கழகத்தில் கற்க வசதியற்றோருக்கு புலமைப் பரிசில் உதவி வழங்குதல்.
3. பெற்றோரை இழந்த பிள்ளைகளை சிறுவர் இல்லங்களில் இணைத்தல்.
4. இயற்கைக் காரணங்களினாலும் வன்செயலினாலும் விதவையான குடும்பத் தலைவிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்குதல், வேலை வாய்ப்பு வழங்குதல்.



யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவை ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்கியமை

5. பின்தங்கிய கிராமங்களுக்கு இலவச அல்லது அடையாளக் கட்டணத்துடனான மருத்துவ சேவை வழங்குதல்.
6. சைவ ஆலயங்களில் இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் சிவ தீட்சை வழங்குவதும் சைவ நெறிமுறையான வாழ்வை வதிவிடப் பயிற்சி மூலம் வழங்குதலும்



சமய நெறிமுறையான வாழ்வுக்கான வதிவிடப் பயிற்சி

7. துன்பப்பட்ட பிள்ளைகளுக்கு உளச்சிகிச்சையின் (விளையாட்டு) மூலம் குணப்படுத்துவதும் மன சாந்தியையும் அமைதியையும் ஏற்படுத்துவதும்
8. மௌனவிரத பயிற்சியை வழங்கி மக்களுககு ஆன்மீக மேம்பாட்டை ஏற்படுத்துதல்
9. பாடசாலை மட்டத்தில் ஆன்மீக மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கான சிறப்புத் திட்டம் தயாரித்து படிப்படியாக பாடசாலைகளில் அறிமுகப்படுத்துதல்.
10. தொழிற் கல்வியையும் கலைகளையும் மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் வழங்குதல்.
11. சித்த மருத்துவத்தை மேம்படுத்தும் நோக்குடன் மூலிகை மருந்துகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
12. இயற்கை வள பாதுகாப்பும் மேம்பாட்டிற்குமான வேலைத்திட்டங்களை தயாரித்து செயற்படுததுதல்.

13. பரந்துபட்ட அடிப்படையில் இளைஞர்களுக்கு தனியாகவும் முதியவர்களுக்கு தனியாகவும் தொண்டர் சேவை அணிக்கு பயிற்சி வழங்கி தொண்டில் ஈடுபடுத்துதல்.



பயிற்சி பட்டறை

14. சைவ ஆலயங்களை ஒருங்கிணைத்து ஆன்மீக மேம்பாட்டிற்காகவும் சமூக மேம்பாட்டிற்காகவும் தொண்டாற்றத் தூண்டுதல்.
15. அறநெறிப் பாடசாலைகள் பற்றி பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தி புத்துணர்வுடனும் புத்தூக்கத்துடனும் அறநெறிக் கல்வி புகட்டுவதைத் தீவிரப்படுத்துதல்



அறநெறி மாணவர்களை ஊக்குவித்தமை

16. யோகக் கலையை புகட்டுதல்.



யோகக்கலைப் பயிற்சி

17. பொது அமைப்புகளாகச் செயற்படும் சைவ அமைப்புக்களை ஒருங்கிணைத்து ஆன்மீக மேம்பாட்டிற்காகவும் சமூக மேம்பாட்டிற்காகவும் தொண்டாற்றத் தூண்டுதல்.

இத்தகைய பணிகளில் பெரும்பாலானவற்றை ஆரவாரமின்றி இந்நிறுவனம் செயற்படுத்தி வருகின்றது. இந்நிறுவனத்தின் தலைவர் ஆர்.கலியுகவரதன் ஒரு யோகக்கலை நிபுணராதலால் அந்நிறுவனத்தின் மூலம் யோகக் கலையை பொதுமக்களுக்கு இலவசமாக புகட்டி வருகின்றார். ‘‘அறிவுக் கதிர்’’ எனும் ஒரு காலாண்டு சஞ்சிகை நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. இதுவரை 4 இதழ்கள் சீரற்ற காலஇடைவெளியில் வெளியிடப்பட்டுள்ளது. சீரற்ற கால இடைவெளி ஏற்பட நிதிப்பற்றாக்குறையே காரணமென்பதை அறியமுடிகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனம் எம்.எஸ்.எப். ஹியூடெப் போன்ற அமைப்புகளுடன் இணைந்து உளநல மேம்பாட்டிற்கான தொண்டை ஆற்றி வந்த இந்நிறுவனத்தின் தலைவர் வைத்தியசாலைகள், பல நிறுவனங்கள், பல பாடசாலைகளில் யோகக் கலையையும் புகட்டி வந்தார். 2006ஆம் ஆண்டில் கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் பாடசாலைப் பிளளைகளுக்கு ‘‘வாழ்வியலில் சைவ சமய அறிவு விருத்திப் பாசறை’’ எனும் தலைப்பில் 3 நாட்கள் வதிவிடப் பயிற்சிகளை பல மாவட்டங்களிலும் தொடர்ந்து நடத்தி வந்தார். அப் பயிற்சி திட்டங்களில் இணைந்த அனைத்துப் பயிலுனர்களுக்கும் சிவ தீட்சை வழங்கப்பட்டதுடன் யோகக் கலையும் ஓர் கற்கை நெறியாகப் புகட்டப்பட்டது. இப்பயிற்சியின் மூலம் பல நூற்றுக்கணக்கான மாணவர்களும் பொதுமக்களும் ஆசிரியர்களும் பலன் பெற்றனர்.

2009ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அரசியல் சமூகப் பொருளாதார விளைவுகளைக் கருத்தில் கொண்டு துன்பப்பட்ட தமிழ் மக்களுக்கு தொண்டு செய்யும் நோக்குடன் இருந்த கலியுகவரதன் அவர்களுக்கு இந்தியாவிலிருந்து இந்து பீடாதிபதிகளினதும் இந்து அமைப்புக்களினதும் உறவு ஏற்பட்டது. அந்த உறவின் காரணமாக 2010இல் இலங்கைக்கு வருகை தந்திருந்த சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களை சந்திக்கும் வாய்ப்பு உருவானது. இந்த உறவுகளின் பயனாக 2011இல் தமிழ்நாடு சிதம்பரத்தல் நடைபெற்ற சேக்கிழார் மாநாட்டில் கலந்து யோகக் கலையைக் காட்சிப்படுத்தி அறிமுகப்படுத்துவதற்கான அழைப்பு கலியுகவரதனுக்கு வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டில் 2011இல் 3 மாதங்கள் தங்கி வாழ்ந்த கலியுகவரதன் தமிழ் மக்களின் மேம்பாட்டிற்காக இந்திய மக்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் வேண்டி பல மாநிலங்களுக்கும் பயணம் மேற்கொண்டார். சில பீடாதிபதிகளையும் சில தொண்டர் அமைப்புக்களையும் சில பொதுமக்களையும் சந்தித்து ஆன்மீக மேம்பாட்டிற்காகவும் மானுட மேம்பாட்டிற்காகவும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவி வழங்கும் படி வேண்டுகோள்களை முன்வைத்தார். சில அமைப்புக்கள் தம்மாலான உதவிகளை வழங்குவதற்கு உறுதியளித்தன.

இதுபோல் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம் வசதியற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குதல், சமூக, சமய உணர்வுடன் எழுதப்படும் நூல்களின் வெளியீட்டுக்கு உதவுதல், அபிவிருத்தியற்ற கிராமங்களுக்குச் சென்று தேவைகளை இனங்கண்டு இயலுமான தேவைகளை பூர்த்தி செய்தல் போன்ற பல சேவைகளை செய்து வருகின்றது. சமூகத்தின் கட்டமைப்பிலே கணிசமான பங்களிப்பினைச் செய்யும் இதுபோன்ற சமய நிறுவனங்கள் பற்றி சமூகத்திலுள்ள ஏனையவர்களும் அறிவது மாத்திரமின்றி தமது பங்களிப்புக்களையும் இவற்றுக்கு செய்வதனால் இத்தகைய நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூகத்தின் மீள்கட்டமைப்புக்கு உதவ முடியும்.

**1.5 முடிவுரை:**

சமூகத்தின் பிரதான கூறான சமயம் மக்களின் கலை, கலாசார, வாழ்வியல் கோலங்களை தீர்மானிப்பதாகும். இதனால் இது போன்ற சமய நிறுவனங்கள் சமூகத்தின் கட்டமைப்பில் முக்கிய பங்காற்றுகின்றன. ஆனால் இத்தகைய சமய நிறுவனங்கள் முக்கியமாக இரண்டு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

1. சமூகத்திற்கான சேவைகளை அவை சரியான முறையில் செய்கின்றனவா என்பன போன்ற விமர்சன ரீதியிலான கருத்துக்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது.
2. சுயலாபமற்ற இச்சேவைகளுக்காக பாரிய நிதிப்பற்றாக்குறை சிக்கல்களை எதிர்நோக்குகின்றன.

இப்பிரச்சினைகளுக்கான தீர்வு சமூகத்திலேயே தங்கியுள்ளது. தமக்கு சரியான சேவைகளைச் செய்யும் சமய நிறுவனங்களை இனங் கண்டுகொள்வது சமூகத்தின் கட்டாயத் தேவையாகும். அதேவேளை சமூகத்திற்காக உண்மையான தொண்டை இந்நிறுவனங்கள் செய்கின்றன என அறியும் பட்சத்தில் தமது முழு ஆதரவையும் அதற்கு வழங்க வேண்டும். இவற்றின் மூலமாகவே சிக்கலற்ற சமூகக்கட்டமைப்பை இந்நிறுவனங்களால் உருவாக்க முடியும். இதன் மூலமே சரியான புரிந்துணர்வை சமூகம் பெறமுடியும்.

**உசாத்துணைப்பட்டியல்**


1. கலியுகவரதன்,ஆர்., 2002,*யோகசாத்திரம்,* சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம், திருகோணமலை, பக். 35 – 47, 62 – 69, 76 – 83
2. கலியுகவரதன்,ஆர்., (பதிப்பு), 2002, அறிவுக்கதிர், இராமமூர்த்தி உடற்பயிற்சி நிறுவனம், திருகோணமலை
3. தினகரன் (தமிழ்ப் பத்திரிகை – இலங்கை), 1956.06.05, பக்.3.
4. சுதந்திரன் (தமிழ்ப் பத்திரிகை – இலங்கை), 1956.06.06, பக்.2.
5. ஈழகேசரி (தமிழ்ப் பத்திரிகை – இலங்கை), 1956.06.10, பக்.1.
6. தினமலர் (தமிழ்ப் பத்திரிகை – தமிழ்நாடு) 2011.02.06, பக்.6.
7. தினக்குரல் (தமிழ்ப் பத்திரிகை – இலங்கை), 2013.04.13, பக்.7.
8. Articles of Association of Sivan Human Development Association, p. 3 – 15
9. Daily News (English News Paper – Sri Lanka), 1956.06.04, p.4.
10. http://amudu gowripalan.blogspot.com/search/label/SIVAN HUMAN DEVELOPMENT ASSOCIATION (Accessed On: 2011.03.05)